உ

கடவுள் துணை.

கள்ளுகடைசிந்து என்னும்

குடியர்சிந்து

இவை.

குயப்பேட்டை

வீ. இராஜு முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1925.

உ

கடவுள் துணை.

கள்ளுகடைசிந்து என்னும்

குடியர்சிந்து

விருத்தம்.

நம்பினான் யிருந்தகள்ளே நாடியை யறிந்தகள்ளே, தம்பியுந்தகப்பன்பாட்டன் தலம்பறை கண்டகள்ளே, வம்புநீசெய்தாய்கள்ளே வருவையோசொல்வாய்கள்ளே, சொம்புபோல்குடுவைகள்ளே சோறுபோல்கொதிக்குங்கள்ளே, தங்கம்போ லானகள்ளே தைரியங்கொடுக்குங்கள்ளே, எங்களை வளர்க்குங்கள்ளேஎங்கேபோ யொளித்தாய்கள்ளே, சிங்கம்போலெதுருங்கள்ளே ஜெயிலுக்கு அனுப்புங்கள்ளே, பொங்கியேவழியுங்கள்ளே புறப்பட்டு வருவாய்கள்ளே.

ஆனந்தக்களிப்பு.

ஜாடியே உன்க்கொருகும்பிடு—அந்த
சாராயங்குடித்தாக்கால் பேதியெடுக்குது
புட்டியேஉனக்கொருகும்பிடு—அந்த
பீரைகுடித்தாக்கா சோரைகெடுக்குது

கள்ளேஉனக்கொருகும்பிடு—அந்த
கஞ்சாவடித்தாக்கா நெஞ்சைவுலத்துது
மரமேஉனக்கொருகும்பிடு—அந்த
மரத்தையிழுத்தால் பலத்தைக்கெடுக்குது
எப்போவருவாயோகள்ளே—உனக்கு
இதுஞாயமல்லநீ எழுந்துவாகள்ளே.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

வந்துதேகள்ளு—ஈஸ்வரன்போலாக
வந்துதேகள்ளு.

அநுபல்லவி.

வந்துதேபார்கள்ளு வாகனங்கரிவாடு [வந்
நொந்துயிருந்தபேரை நெட்டித்தள்ளிக்கொண்டு-

சரணங்கள்

ஆதிவேலைகளெல்லாம் அடிமொண்டுபோச்சுது
அஞ்சணு ஆறணு படியொன்றுஆச்சுது
சோதியதன்சுருக்கு சூரியனுக்கும்யேது [ல்
சுள்ளைக்கடித்துக்கொண்டு உள்ளுக்குக்கள்விட்டா
யெழும்புதேபோதை—தலைக்குமேல் கைதூ
கடிக்கும்தபல்லை [க்கி
ஆறணுபோனாலும்ஆட்டின்மயிரேபோச்சி
அதுகுடிக்கும்போதை காட்டுப்புலியும்சீசீ

பாரில்பட்டையும்பத்தாய் குழந்தைகுடிக்கும்பாச்சி
பாட்டாக்கள் ஒருமூச்சிபாணந்தடுத்துபோச்சி (வந்)

ரகுபதிகடைக்கள்ளு ராவெல்லாங்கொடையுது
ரவுண்டுடாணுக்கள்ளு கிருக்குகள்வாங்குது
பரச்சேரிகடைக்கள்ளு பாடுதுஆடுது
பாழுஞ்சுடுகாட்டுகள்ளு தலைகீழாய்துள்ளுது
இதுவென்னகள்ளு—பலவைதொட்டிகள்ளு
ஒழுவுதேசொள்ளு
பெண்சாதியெதிர்த்தாக்கால்பளிச்சென்றுமாட்டுது
பிள்ளைநயினுவென்றால் சொல்லையிலடிக்குது
தன்பேச்சிபோல்வந்தால் தட்டிக்கொடுக்குது
தடுத்துசொன்னால்பல்லை கடித்துமுடுக்குது
யெடுக்குதேகிருக்கு நாலுபேர்பிடித்தாலும்
யிழுக்குதே மொரப்பு. வந்து

செஞ்சி ஏகாம்பர முதலியாராலியற்றிய

குடியர் அலங்காரம்

வெண்பா.

காலைக்குடியரெல்லாம் கவைக்குதவார்கள்குடிப்பார்
வேலைக்குப்போகார் வெறியனைப்போலலைவார்
வெறுமைவந்தபோது வேலைக்குப்போவார்
தருமமோகுடியர்க்குத் தான்.

புருஷன்சொல் சிந்து.

முக்கிமுக்கி கஷ்டப்பட்டு கேளடி பெண்ணே
மூணுபணங்கொண்டுவந்தேன் பாரடி கண்ணே
பக்குவமாய்செலவுநீ பண்ணடி பெண்ணே
பாட்டாக்கள்ளுக்கொருபணந் தாக்கடி கண்ணே

பெண் சொல்லல்.

கள்ளைமறந்திடடா குடிகார பாவி
காலையில் குடியாதடா சதிகாரப் பாவி
பிள்ளைகுட்டிபெத்தாயோடா சண்டாளப் பாவி
யின்னம்புத்திவல்லையோடா குடிகாரப் பாவி

(புரு) சேனைநாள்பழக்கமடி முட்டாளு பெண்ணே
ஜென்மத்திலேவூரிபோச்சு கெட்டண்டி கண்ணே
நானுமட்டுங்குடித்தேனென் றுளண்ணுதே பெண்ணே
நாலுமூணுதலம்பரையாய் நடக்குது கண்ணே

(பெ) குடிக்கேனென் றுசத்தியங்கள்பண்ணேயே பாவி
குடல்பழுத்துதென் றுகதை சொன்னையே பாவி
ஜாடிகள்ளுஉன்குலைக்கிப்போதாதே பாவி
சாப்பிட்டாலும் வீண்சண்டைகள் செய்யாதே பாவி

(புரு) மனவருத்தப்படுவதாலேகேளடி பெண்ணே
மானமாகிலுந்தின் றுவாரண்டி கண்ணே
துணதுணென் று பேசாதடி முட்டாளு பெண்ணே
துட்டுகூடகுறைஞ்சிபோச்சி தூக்குது

(பெ) பணம்போனாலும் போகுதையா எந்தன் கணவா
பங்கிவுண்டை பழக்கம்வேண்டாம் எந்தன் கணவா
குணத்தின்படி நடப்பேனையா எந்தன் கணவா
கும்மாமுட்டுக்குடுக்கவேண்டாம் எந்தன் கணவா

(புரு) கும்மாவுன்னை குடுப்பதில்லை கேளடி பெண்ணே
குடிக்கிமட்டும் ஒத்தைபணம் தாக்கடி கண்ணே
சும்மாசம்மாசொன்னேனென்று எண்ணாதே பெண்ணே
சோத்துப்பானை யெகிரிப்பூடுந் தவறினால் கண்ணே

(பெ) சோத்துப்பானை எகிரிப்போனால் கேளடா பாவி
உன்கூத்து தாண்டா காஞ்சிபோகுங்குடிகார பாவி
நேத்துசொன்னசத்தியத்தை மறந்தாயே பாவி
நெஞ்சிமட்டும் நெட்டிவிட்டு வந்தாயே பாவி

(புரு) குடியருக்கு சத்தியங்களேதடி பெண்ணே
கூச்சலிங்கேபோடவேண்டாம் கேளடி பெண்ணே
படியடித்தும்போதைகொஞ்சங்காணண்டி பெண்ணே
பணமிருந்தால்பட்டைகுடித்து வருவண்டி கண்ணே

(பெ) பட்டைமூஞ்சிலிடிவிழுக குடிகாரப் பாவி
பாட்டாவுடன்பட்டைசேர்ந்தால் மோசண்டாபாவி
கஷ்டப்பட்டுபணத்தைவீணா யழிக்காதே பாவி
காலங்கருப்பானதினால் சொன்னேண்டா பாவி

... பணம்போனாலும்ஷ்டம்போச்சிகேளடி பெண்ணே
... தால்கையுங்காலு முறைக்குது பெண்ணே

கணக்குப்பார்த்துகுடிக்காவிட்டால்கேளடி பெண்ணே
காலணாகூடகையில் கிட்டாது பெண்ணே
(பெ) பஞ்சைப்போலேகற்றகல்வி படிக்காதே பாவி
பாரிலுள்ளோரெல்லாம்வுன்போல்குடித்தாரோ பாவி
செஞ்சி-ஏகாம்பரங்கவியை வேளடா பாவி
சிரிக்குதுஉலகமெல்லாங் குடிகாரப் பாவி

தெலுங்குந்-தமிழும்

ஒகநெலகா படினபாடு
ஊரந்தஅடிகிருடு ஜாடியே கள்ளுஜாடியே
பீருபுட்டிசெய்தமோசம் [யே
பீப்பாதண்ணியைகேட்டுபோருஜாடியேகள்ளுஜாடி
போசேடப்புடுசுருகண்டாதி
போயினவதலா ஏமிலேதுபுட்டியே கள்ளுபுட்டியே
பட்டைதண்ணியைநம்பிநம்பி
சொட்டுமூத்ரங்கூடகாணோம் புட்டியே கள்ளுபுட்
கள்ளுவொச்சினமாடவினி [டியே
பாலிவாளுபயப்படுந்தி காவடி கள்ளுகாவடி
இத்தனைநாள் பட்டபாடு [குடுவையே
யாரைகேட்டால்தெரியபோவுதுகுடுவையே கள்ளு
சிறுமணவூர்முனிசாமி [தையே
செப்பிசெப்பிநவ்விருடுமொந்தையே கள்ளுமொந்

பரிபூரணானந்தபோதம் னேற்று
பகலெல்லாமழைபெய்து சுவரெல்லாம்ஓதம்
சாருயப்புட்டியைநம்பு—அதை
சாப்பிட்டால்கொடுக்குதே அளவற்றதெம்பு
கையிக்கிசெலவில்லை கொம்பு—யாரை
கண்டதேகுத்தினல் கயளுதேகெம்பு தரு

பெற்றதாய்சொல்லைக்கேளாதே—உந்தன்
பெண்டாட்டிபிள்ளைக்கி கஞ்சிவார்க்காதே
உற்றுரைஊரில் சேர்க்காதே—உந்தன்
ஆயுசுக்கும்ஒருகாசு தருமஞ்செய்யாதே தரு

பெற்றதாயாரைதடிகொண்டு மாட்டு—பெற்ற
தகப்பனையும்பாட்டனையும் வீட்டைவிட்டோட்டு
உற்றுரைஉரவாரைமாட்டு—இந்த
ஊரிலுள்ளோர்மேல் கச்சையுங்கட்டு
தருமஞ்செய்யாதிருமணமே—நாளை
கருமதீதைசெய்தாலேகடைத்தேறலாமே. தரு

கள்ளுகடைசிந்து
முற்றிற்று.
